Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 92/2020 |
| Police station | : | RPF-Cuddalore |
| Deposition of witness for Prosecution | : | LW9 / PW6 |
| Name | : | கற்பூரசுந்தரபாண்டியன் |
| Father Name/Husband Name | : | த/பெ. தட்சிணாமூர்த்தி |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 22.05.2025 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA.LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜர். ).

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது விழுப்புரத்தில் Senior Section Engineer/ TRD ஆக பணி புரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடலூரில் Senior Section Engineer/ TRD ஆக 2020 to 2024 பணி புரிந்து வந்தேன். 14.02.2020 அன்று RPF காவல் நிலையத்தில் இருந்து காவல் நிலைய குற்ற எண். 3/2019 ல் திருட்டு பொருட்களை ஆய்வு செய்யும் படி ஒரு வேண்டுகோள் கடிதம் வந்தது. 22.02.2020 அன்று நான் RPF SI அலுவலகம் சென்று காவல் நிலைய குற்ற எண். 3/2019 ல் திருட்டு போன இரயில்வே சொத்துக்களை ஆய்வு செய்தேன், அதில் ஒரு வெள்ளை பாலிதிங் கவரில் இரயில்வே OHE காப்பர் டிராப்பர் ஒயர்
5mm – 27 Nos அத்துடன் சேர்ந்த பொருளான காப்பர் லாக் பிளேஸ் 100 Nos, காப்பர் டிராப்பர் கிளிப்ஸ்- 69 Nos, காப்பர் கான்டேக்ட் ஒயர் 3 FT-1 Nos, காப்பர் கான்டேக்ட் ஒயர் 2 FT-1 Nos, இருந்தது அதை நான் ஆய்வு செய்தேன். அதில் ஆய்வு செய்ததில் மேற்சொன்ன 69 காப்பர் டிராப்பர் கிளிம்சில் Khatri 1192 என்ற இரயில்வே அடையாள எண் குறிப்பிட்டு இருந்தது. காப்பர் லாக் பிளேஸ் 100 Nos ல் Sec 1163 என்ற இரயில்வே அடையாள எண் குறிப்பிட்டு இருந்தது. இவைகளை நான் ஆய்வு செய்து மேற்சொன்ன அனைத்து பொருட்களும் இரயில்வே சொத்துக்கள் என்று சான்றளித்தேன். **மேற்படி சான்று ஆவணம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்சொன்ன பொருட்கள் எதுவும் பொது இடங்களில் கிடைக்கக்கூடியது

அல்ல. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பொருட்கள் தான் நான் மேற்சொன்ன ஆய்வு செய்து சான்று வழங்கிய பொருட்கள் ஆகும். 22.10.2020 அன்றே ஆய்வாளர் என்னை விசாரித்து என்னுடைய வாக்குமூலத்தை பெற்றுக்கொண்டார். **மேற்படி வாக்குமூலம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

நான் உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்று தான் கடலூருக்கு வந்து ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். பொதுவாக இரயில்வே சொத்துக்கள் அனைத்திலும் SR என்ற குறியீடு இருக்கும் என்றால் இல்லை. நான் ஆய்வு மேற்கொண்ட பொருட்கள் புதிய பொருட்களா அல்லது பழைய பொருட்களா என்பது குறித்து நான் சான்று அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் ஆய்வு செய்த பொருட்களை புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. நான் ஆய்வு செய்து சான்று அளித்தது பற்றி அறிக்கை ஏதேனும் என்னுடைய மேல் அதிகாரியிடம் சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. நான் தற்போது நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தபொருட்கள் அனைத்தும் இரயில்வே நிர்வாகத்திற்கு சொந்தமான பொருட்கள் இல்லை என்றால் சரியல்ல. இரயில்வே நிர்வாக சொத்து அனைத்திலும் SR என்ற குறியீடு இருக்கும் என்றாலும் இரயில்வே போலிசாருக்கு அனுசரனையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.